# <u>பெயர்த் தமிழ்</u>

உயிர்களின் பிறவிக்கடன்கள் இரண்டு. முதலாவது, தன் இனத்தைப் பெருக்கி அழிவிலிருந்து காப்பது. இரண்டாவது, இப்பூவுலகை வளப் படுத்தி அனைத்து உயிர்களையும் அழிவிலிருந்து காப்பது. தமிழனின் பிறவிக் கடன்கள் மூன்று. முன்னிரண்டோடு முதன்மையானது. தமிழ்த்தாயை மேலும் செழுமையாக்கி, மேன்மேலும் மேன்மையாக்கி, தாழ்விலிருந்து காப்பது. அதன் ஓரங்கமாக, தமிழில் தம் மகவுக்குப் பெயரிடுவது தமிழனின் மூன்றாவது பிறவிக்கடன்.

## நம் பெயர் நம் அடையாளம்

தமிழ்த்தாய் ஈன்றெடுத்த செந்தமிழனின் அடையாளங்களுள் ஒன்று அவனது பெயர். ஒவ்வொரு தமிழனின் தலையாய பொறுப்புகளுள் ஒன்று தனக்கும் தன் சுற்றத்துக்கும் நட்புக்கும் பிற மொழிக் கலப்பற்ற தூய தமிழில் பெயர் சூட்டப்பட்டிருப்பதை உறுதி செய்வதாகும். ஆகவே இவ்விடம் நாம் கைக்கொள்ள வேண்டிய பணி யாதெனில் ஒரு பெயர் தூய தமிழ்ப்பெயர் தானா என்பதை அறிந்து கொள்ளும் அறிவும் வாய்ப்பும் ஒவ்வொரு தமிழனுக்கும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதும் அவற்றை வழங்குவதும் ஆகும்.

இன்று இணையத்தில் குழந்தைகளுக்கான தமிழ்ப்பெயர்கள் என்று சொடுக்கினால் வந்து விழும் பெயர்களுள் பெரும்பாலானவை தமிழில் எழுதப்பட்ட அயல் மொழிப்பெயர்களாய் இருப்பது கவலைக்குரியது.

## ஏன் அயல் மொழிப் பெயர்?

தமிழனின் பெயர் பிற மொழியில் அமைவதற்குக் கரணியமாய் அமைபவற்றுள் முதன்மையானது மத அல்லது இறை நம்பிக்கை. ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் தமிழன் தன் குழந்தைகளுக்கு இடும் பெயர் அம்மதத்தைச் சார்ந்ததாக அமைந்து விடுகிறது. தன் மக்களுக்குப் பெயரிடும் போதெல்லாம் தான் வணங்கும் கடவுளின் பெயரோ அல்லது அக்கடவுளைத் தொழப் பயன்படுத்தப்படும் மொழியில் வழங்கி வரும் பெயரோ தான் அவனுக்கு நினைவில் வருகிறது. அப்போதெல்லாம் தமிழ்த்தாய் பின்னால் தள்ளப்பட்டு விடுகிறாள்.

தமிழன் தன் முந்தைத் தமிழனின் பெயரைப் பறித்து, தன் பிந்தைத் தலைமுறைக்குச் சூட்டி மகிழந்த காலம் ஒன்று முன்பு இருந்தது. பெரும்பாலான தமிழனுக்கு அது ஒரு இறந்தகாலம். இன்றைத் தமிழன் தன் தந்தை, தாய், தாத்தா, பாட்டி அல்லது வேறு யாரோ சிலரது பெயர்களில் இருந்து சிற்சில எழுத்துகளை எடுத்து ஒட்டி எம்மொழியிலும் இல்லாத, நம் மொழியிலும் அடங்காத ஒரு பெயரைக் கண்டுபிடித்துச் சூட்டி மகிழ்கிறான். அப்போதெல்லாம் தமிழ்த்தாய் தீயில் தள்ளப் பட்டு விடுகிறாள்.

## பெயர்த் தமிழ்

வேர்ச்சொற்களால் ஆக்கப்பட்ட தமிழின் கட்டமைப்பு அவளது பெருஞ்சிறப்புகளில் ஒன்று. ஒவ்வொரு தமிழ்ச்சொல்லும் ஒவ்வொரு வேர்ச்சொல்லிலிருந்து கிளைத்ததே. அவ்வாறே ஒவ்வொரு தமிழனின் பெயரும் ஒவ்வொரு வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த தமிழ்ப்பெயராகவே இருக்க வேண்டும். இதுவரை எப்படியோ, இனிமேல் ஒவ்வொரு தமிழனும் தமக்குப் பிறக்கவிருக்கின்ற குழந்தைக்கு இடும் பெயர் தமிழ்ப்பெயராகவே இருக்க வேண்டும்.

அவ்வாறெனில் தமிழ் வேர்ச்சொற்கள் பற்றிய அறிவும் புரிதலும் தேர்ச்சியும் ஒவ்வொரு தமிழனுக்கும் அடிப்படைத் தேவையல்லவா? இவ்வறிவு இருந்தால் தானே ஒரு பெயர் தமிழ்ப் பெயரா இல்லையா என்பதே தமிழனுக்குத் தெரிய வரும்! நமது தற்போதைய பயணமும் இதை நோக்கியது தான், தமிழின் வேர்ச்சொற்கள் பற்றிய அறிவைப் பெறுவது, பெற்ற அறிவின் அடிப்படையில் தூய தமிழ்ப்பெயர்களை ஆக்குவது மற்றும் ஆக்கிய பெயர்களை நம் மக்களுக்குச் சூட்டுவது ஆகியன நமது பயணத்தில் கடக்க வேண்டிய படிக்கற்கள். இவ்விடம் நாம் தமிழில் பெயரிடுவதற்குதவும் வேர்ச்சொற்களைக் குறித்து மட்டுமே எண்ணினால் போதும். அதுமட்டுமல்லாது, நற்பொருள் தரும் வேர்ச்சொற்களை மட்டுமே நாம் கருத்தில் கொள்வோம்.

## பெயராக்க வழிமுறை

இங்கு நாம் ஆக்குகிற தமிழ்ப்பெயர்கள் தாவரம், விலங்கு, நிலம், பொழுது, இயல்பு, தோற்றம் போன்றவற்றைக் குறிப்பிடும் வேர்ச் சொற்களை அடிப்படையாகக் கொண்டவை. அவ்வாறே அவை இங்கு வகைப்படுத்தப்பட்டு, வரிசைப்படுத்தப்பட்டு, பட்டியல் வடிவில் வழங்கப்பட்டுள்ளன.

சான்றாக, அகண்டன் என்ற சொல் பகுக்கப்பட முடியாதவன் என்ற இயல்பின் அடிப்படையில் பொதுவாக இறைவனையும் குறிப்பாக சிவனையும் குறிக்கும் பெயராயிற்று.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகண்டன் | இறைவன் சிவன் |
| | கடவுள் |
| | கணிக்கப்பட முடியாத இறைவன் |

அங்ஙனமே, அகளங்கன் என்ற சொல் குற்றமற்றவன் என்ற இயல்பின் அடிப்படையில் பொதுவாக இறைவனையும் குறிப்பாக புத்தனையும் குறிக்கும் பெயராயிற்று.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகளங்கன் | புத்தன் |

அகசம் என்பது எலுமிச்சையைக் குறிக்கும் சொல். தம் ஆண் குழந்தை எலுமிச்சைப்பழ நிறத்தில் பிறந்திருப்பதாகக் கருதும் பெற்றோர் அகசன் எனப் பெயரிடலாம். அகைம்ம் எனில் கருந்தாளி மரம் ஆகும். இம்மரத்தின் இயல்பான உறுதியை எடுத்துக் கொண்டு உறுதியானவன் என்ற பொருள்படுமாறு அகைமன் என்ற பெயர் ஆக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகசன் | எலுமிச்சை நிறத்தவன் |
| அகைமன் | உடலாலும் மனதாலும் உறுதியானவன் |

தம் ஆண் குழந்தை அகத்திக் கீரை போன்று தம் குடும்பத்துக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பயனளிப்பவனாக வாழவேண்டும் என்று விரும்பும் பெற்றோர் அகத்தியன் என்ற பெயரை அவனுக்குச் சூட்டலாம்.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகத்தியன் | உள்ளும் புறமும் பயனளிப்பவன் |

அகரம் எனுஞ்சொல் வயல்கள் சூழ்ந்த மருதநிலத்து ஊரைக் குறிப்பது. மருதநிலத்தூரில் பிறந்த குழந்தைக்கு அகரன் என்ற பெயரினும் சிறந்த பெயருண்டோ? அது மட்டுமன்றி, அகரம் தமிழ் வண்ணமாலையின் முதலெழுத்தும் முதனமையெழுத்துமாகும். ஆகவே, முதன்மையான தமிழன் என்கிற பொருளில் அகரன் எனவும் குழந்தைக்குப் பெயரிடலாம். இவற்றோடு, அகரம் எனில் தேர் எனவும் பொருளுண்டு. தம் ஆண் மகவு தேர் போன்று உயர்வும் உறுதியும் உடையவனாக, பிறர் தொழத்தக்க வகையில் வாழந்தோங்க வேண்டும் என்று எண்ணுவோர் அகரன் என்று தம் குழந்தைக்குப் பெயர் சூட்டலாமே.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகரன் | முதன்மையானவன் |
| | மருத நிலத்தவன் |
| | தேர் போன்று உயர்வும் உறுதியும் உடையவன் |

அக்காரம் எனில் சருக்கரை ஆகும். சருக்கரை இனிமையானது. தம் செல்லக்குழந்தை இனியன் இன்சொலனாவான் என நம்பும் அம்மையப்பர்கள் அவனை அக்காரன் என இனிமையாக அழைக்கலாம்.

| பெயர் | பொருள் |
|---|---|
| அக்காரன் | இனிமையானவன் |

இணை நீங்கின் உயிர் வாழாப் பறவை அன்றில். அத்தன்மையவன் தம் மகன் என நம்பும் பெற்றோர் ஆண் அன்றில் பறவை போன்று இல் வாழ்பவன் நான் பெற்றவன் என்று உலகுக்கு எடுத்தியம்ப விழைந்தால் அதற்குப் பொருத்தமான பெயர் தான் அகன்றிலன்.

| பெயர் | பொருள் |
|---|---|
| அகன்றிலன் | இணை நீங்கின் உயிர் வாழா ஆண் அன்றில் பறவை போன்று இல்வாழ்பவன் |

நம்முடைய இம்முயற்சிக்கு அடிப்படையாக அமைந்து வருவது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ஆகும். நாம் இங்கே வழங்குகின்ற பெயர்கள் எல்லாம் ஒன்றில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் நேரடியாக இடம்பெற்ற பெயர்களாக இருக்கும் அன்றில் மேற்கூறப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் நாம் ஆக்கியதாக இருக்கும்.

இயற்றமிழைக் கற்றுள்ள நாம் இனி பெயர்த் தமிழைக் கற்போம்!